**பாதுகாப்புச் சேவைகள் கட்டளை மற்றும் பதவி நிலைக் கல்லூரிம் - 2022**

-----------------------------------------------------------------------------------------------------------

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

பாதுகாப்புச் சேவைகள் கட்டளை மற்றும் பதவி நிலைக் கல்லூரியின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான் விரிவான வருமானக் கூற்று, மூலதன மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இவ்வறிக்கையின் 1.5 பந்தியில் காட்டப்படும் தாக்கத்தை தவிர்த்து பதவி நிலைக் கல்லூரியின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இவவறிக்கையில் 1.5 பந்தியில் காட்டப்படும் விடயங்களின் மீது அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, பதவி நிலைக் கல்லூரி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது பதவிநிலைக் கல்லூரியியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்நது இயங்கும்

கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பதவி நிலைக் கல்லூரியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உபபிரிவின் பிரகாரம் பதவி நிலைக் கல்லூரியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கல்லூரி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வளரின் பொறுப்பு)**

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ்கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக் கொள்வதற்காகவேயன்றி பதவி நிலைக் கல்லூரியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.
- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு பதவி நிலைக் கல்லூரிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் சபையின தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம்செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பதவி நிலைக் கல்லூரியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- பதவி நிலைக் கல்லூரியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுக்கு இணங்க, பாதுகாப்புச் சேவைகள் கட்டளை மற்றும் பதவி நிலைக் கல்லூரி இணங்கியிருந்ததா என்பதும்,

- பதவி நிலைக் கல்லூரி அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- சபையின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயார்ப்பது தொடர்பாக கணக்காய்வாளரின் அதவானிப்புக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்கள் தயார்ப்பதன் மீதான உள்ளகக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கூட்டுத் தொகை ரூபா 16,696,210 பெறுமதியான 13 ஜர்னல் குறிப்புக்களின் சரியான தன்மை தொடர்பாக கணக்காளரினால் உறுதிப்படுத்தி இருக்காததுடன் ஜர்னல் வவுசர்களும் தயாரிக்கப்பட்டு இருக்கவில்லை. | பொது ஜர்னலூடாக குறிப்பு வைக்க வேண்டிய கணக்கீட்டு செம்மையாக்ககள் அனைத்தும் ஒவ்வொறு தலைப்பின் கீழ் வெவ்வேறாக ஜர்னல் குறிப்பிட்டு கணக்காளரினால் கைச்சாத்திட்டு கணக்கு பரிசோதனை பட்டியலிற்கு உள்ளடக்கப்பட்டுள்ளது. அந்த ஜர்னல் குறிப்புக்களிற்குரிய அனைத்து ஆவணங்கள் மற்றும் கடிதக் கோவைகள் கல்லூரியின் கணக்கு பிரிவினுள் பராமரிக்கப்படுகின்றன. | ஜர்னல் குறிப்புக்களிற்கு ஜர்னல் வவுசர் பத்திரங்கள் தயாரிக்கப்பட வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அரச மானியத்தின் கீழ் கொள்வனவு செய்துள்ள ஆதன பொறிகள் மற்றும் உபகரணங்களிற்குரிய ரூபா 1,920,362 ஆன பெறுமானத் தேய்வு கூடுதலாக கணக்கீடு செய்யப்பட்டு இருந்தது. அதன் பிரகாரம் இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 20 இற்கு முரணாக மீளாய்வாண்டில் பெறுமானத் தேய்வு செலவினம் மற்றும் பிற்போடப்பட்ட வருமானம் அப் பெறுமானத்தால் கூடுதலாக காட்டப்பட்டிருந்தது. | அத்தவறை ஜர்னல் குறிப்பு மூலம் திரண்ட நிதயத்தின் ஊடாக 2023 மே மாதம் சரி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும. | சொத்துக்களின் தேய்வினை சரயாக கணக்கிட்டு கணக்கீடு செய்ய வேண்டும். |
| (ஆ) | படைத் தளபதியின் பிரியாவிடை ஒன்றுகூடலிற்கு செலுத்திய ரூபா 307,828 தொகை கல்லூரியின் உபசரனை செலவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் இவ்வாறன தவறுகளை குறைத்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கிறேன். | அரச பணத்தை மிகச் சிக்கனமாக கல்லூரியின் நோக்கத்திற்காக செலவிடப்பட வேண்டும். |
| (இ) | கடந்த ஆண்டு குறைத்து கணக்கீடு செய்யப்பட்ட ரூபா 249,750 ஆன பணிக்கொடை படிகளை சீர்செய்கையில் மீளாய்வாண்டின் பணிக்கொடை கணக்கிற்கு வரவு வைத்ததனால் பணிக்கொடை செலவு அப் பெறுமானத்தால் கூடுதலாக பிரதிபலித்திருந்தது. | எதிர்காலத்தில் இவ்வாறன தவறுகளை குறைத்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கிறேன். | கடந்த ஆண்டின் தவறை சீராக்கல் திரண்ட நிதியத்தின் மூலம் சரிசெய்யப்பட வேண்டும். |
| (ஈ) | கூட்டுத் தொகை ரூபா 2,293,012 ஆன விரிவுரை கட்டணம், உபசரனை செலவு மற்றும் வரைபடக் கொள்வனவு செலவு | 2022.12.31 திகதியின் பின்னர் கொடுப்பனவு செய்ய ஒவ்வொறு நிறுவனத்தினாலும் சமர்பிக்கப்பட்ட வவுசர் | ஆண்டிற்குரிய அட்டுறு செலவுகளை இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும். |

| | | |
|---|---|---|
| அட்டுறு செலவாக இனங்காணப்பட்டிருக்கவில்லை. | பத்திரங்கள் ஆகையால் அட்டுறு அடிப்படையில் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது கணக்கீடு செய்ய இயலாது போயுள்ளது. | |

**1.6 சட்டங்கள் விதிகள் பிரமாணங்களுடனான இணக்கமின்மைகள்**

| | அவதானிப்புக்கள் | | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| | **சட்டங்கள், விதிகள் பிரமாணங்களுடனான தொடர்பு** | **இணங்காமை** | | |
| (அ) | 1980 இலக்கம் 46 கொண்ட சேவை வழங்குனர்களின் நம்பிக்கை பொறுப்பு நிதிய சட்டம் | கல்லூரியின் சிவில் ஆளணிக்காக 2009 ஆண்டு முதல் 2022 ஆகஸ்ட் 31 வரை பங்களிப்புத் தொகை சேவை வழங்குனர்களின் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு செலுத்தியிருக்கவில்லை. தற்போது சேவையில் ஈடுபட்டுள்ள 64 ஊழயர்களிற்காக செலுத்த வேண்டிய பங்களிப்புத் தொகை ரூபா 7,583,786 ஆனது. | 2009 ஆண்டு முதல் 2022.08.31 வரை சேவை வழங்குனர்களின் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு பங்களிப்புத் தொகை செலவு வைக்கப்படவில்லை. தொழிலாளர் திணைக்களத்தினால் கிடைக்கும் ஆலோசனை மீது முன்நடவடிக்கை எடுப்பதாக அறவிக்கப்படுகிறது. | சேவை வழங்குனர்களின் நம்பிக்கை பொறுப்பு நிதிய சட்ட ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | நிதிப் பிரமாணம் 94(1) | வருடாந்த பொறுப்பு, மதிப்பீடுகளில் அதற்காக நிதி ஏற்பாடு இருந்தால் அன்றி எந்த திணைக்களத்தினாலும் வேலை அல்லது சேவையொன்றை வழங்க எவ்வித செலவிற்கு அல்லது கடப்பாடுகளிற்கு கடப்பட்டிருக்கக் கூடாது. அவ்வாறாயினும் ரூபா 1,200,400 செலவு எற்பாட்டை விஞ்சி பொறுப்புக்களிற்கு உட்பட்டிருந்தது. | 2022 ஆண்டினுள் நிலவிய அதிக பணவீக்க சூழ்நிலை காரணமாக அனைத்து பண்டங்கள் மற்றும் சேவைகளின் விலைகள் அதிகரித்த காரணத்தால் ஏற்பாட்டு எல்லையை விஞ்சி பொறுப்புக்களிற்கு உட்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணம் மற்றும் நிதி ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 86,736,631 ஆக காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 28,959,510 ஆக காணப்பட்டது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 57,777,121 தொகையான வளர்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக செயற்பாட்டு செலவினம் ரூபா 19,059,686 இனால் அதிகரித்தமையை விட வெளிநாட்டு மாணவர்களிடமிருந்து கிடைத்த வருமானம் ரூபா 41,212,423 இனை மற்றும் அதன் மீது கிடைத்த செலாவனி இலாபம் ரூபா 31,560,311 இனால் அதிகரித்தமை இவ் வளர்ச்சிக்கு பிரதானமான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நாட்டில் நிலவிய நெருக்கடியான நிலையுடன் பொது திறைசேரியினால் செலவின கட்டப்படுத்தல் தொடர்பாக வெளியிடப்பட்ட சுற்றறிக்கைக்கு முரணாக பதவி நிலை கல்லூரியின் நடவடிக்கைகளை பரிசோதிப்பதற்காக பாதுகாப்பு செயலாளர், பாதுகாப்பு பதவிநிலை உத்தியோகத்தர், முப்படை இராணுவ தளபதிகளின் வருகைக்காக 5 நாட்களிற்கு ரூபா 1,144,658 ஆன உபசரணை செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | தென் ஆசியாவின் பிரதான பதவி நிலை பயிற்சி கல்லூயொன்றான இந் கல்லூரியின் கல்வி நடவடிக்கைகளை அவதானிப்பதற்காக ஒவ்வொறு வருடமும் முப்படை தளபதிகள் மற்றும் பாதுபாப்பு செயலாளர் அவர்கள் வருகை தறுகின்றனர். அதற்காக செலவு செய்ய எவ்வித நிதியும் இக் கல்லூரிக்காக இல்லாததால் உபசரணை செலவின தலைப்பின் கீழ் கடந்த ஆண்டுகளை போன்றே 2022 ஆண்டிலும் அந்த செலவுகளை மேற்கொள்ள நேர்ந்ததாக தயவுடன் அறிவிக்கிறேன். எனினும் கணக்கய்வு குழுவினால் பரிந்துரைத்த விடயங்களை இதன் பின்னர் வலுப்பெறச் செய்ய மற்றும் 2022.04.06 திகதிய இலக்கம் 03/2022 கொண்ட தேசிய பாதீட்டு சுற்றறிக்கை மூலம் சுட்டிக் காட்டியுள்ள செலவுகளை கட்டுப்படுத்த தற்போதே செயற்பட்டுள்ளதாக தயவுடன் அறிவிக்கிறேன். | குறித்த சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஹெய்யன்துடுவ இளைஞ்ஞர் சேவை சபைக்கு சொந்தமான 11 ஏக்கர் காணியில் கல்லூரியினால் கட்டிடங்களை நிர்மாணித்து அவற்றை பயன்படுத்திக் கொண்டிருந்த போதும் அக் காணியில் சட்டரீதியான உரிமையை நடைமுறை ஆண்டின் திசெம்பர் 31 அளவிலும் சுவீககரித்திருக்கவில்லை. | ஏக்கர் 11 பர்சஸ் 10 அளவான காணியை காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவிற்கு சுவீகரித்துக் கொண்டுள்ளதுடன், அக் காணி அளவை, கல்லூரிக்கு சுவீகரிக்கும் நடவடிக்கைக்காக கம்பஹ மதிப்பீட்டு அலுவலகத்தினால் மதிப்பீட்டு செயற்பாடுகளை மேற்கொண்டு அங்கீகாரத்திற்காக கொழுப்பு பிரதான மதிப்பீட்டு அலுவலகத்திற்கு சமர்பித்துள்ளதுடன், இவ் அங்கீகாரத்தை காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவிற்கு அனுப்பியதன் பின்னர் காணி சுவீகரிக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்வதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | காணியின் சட்டரீதியான உரிமையை சுவீகரித்துக் கொள்ள வேண்டும். |

### 3.3 சர்ச்சைத் தன்மையான கொடுக்கல்வாங்கல்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2022 ஒக்டோபர் 11 திகதி கல்லூரியின் தேவைக்காக புகைப்பட கருவியொன்றை கல்லூரியின் நிறுவன தலைவர் நிதியம் (கநித) ஊடாக பணம் செலுத்தி கொள்வனவு செய்து பின்னர் அந் நிதியத்திற்கு மீள் நிரப்பப்பட்டிருந்தது. கநித நிதியத்திலிருந்தது ரூபா 1,186,480 தொகையொன்றை பெற்றுக் கொண்டு பண்டத்தை கொள்வனவு செய்த பின்னர் 2022 நவம்பர் 08 ஆம் திகதி விலைமனு கோரி பெறுகைகள் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு பின்னர் கடிதக் கோவை தயாரிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் கல்லூரயினால் பெறுகைகள் வழிகாட்டிக் கோவைக்கு முரணாக இந்த புகைப்பட இயந்திரத்தை கொள்வனவு செய்ய பின்னர் போலியான மற்றும் பொய்யான ஆவணங்களை தயாரித்துள்ளதாகவும் அதற்கு ஆதரவு வழங்கியுள்ளதாகவும் அல்லது கவனயீனத்துடன் அல்லது கவனமின்றி அல்லது அரச உரிமைகளுக்கு பாதிப்பு ஏற்படும் விதத்தில் செயற்படல் அல்லது அவ்வாறு செய்ய இடமளிக்கப்பட்டு இருந்ததுடன் அது தொடர்பாக தாபன விதிக் கோவை II பிரிவு பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கெமராவை கொள்வனவு செய்ய பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் விலைமனு திறந்த பின்னர் தொமகு இனால் அதன் போது நிலவிய சந்தை விலைகளுடன் வழங்கல் நிறுவனங்களினால் முன்வைத்துள்ள விலைகளை ஒப்பீட்டு ரீதியாக பரீட்சிக்கும் போது கைகாசிற்கு பண்டத்தை பெற்றுக் கொண்டால் கனிசமான பொது நிதி அளவொன்றை சேமித்துக் கொள்ள முடியுமாக இருப்பதால் நிமித்த தேவைப்பாட்டை தொமகு இனால் பணம் செலுத்தி கொள்வனவு செய்ய முன்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பெறுகைகள் நடவடிக்கையை மேற்கொள்ளும் போது பெறுகைகள் வழிகாட்டியை உரியாவாறு செயற்படுத்தி இருக்கவில்லை. எதிர்காலத்தில் உரிய பெறுகைகள் நடைமுறைகளுக்கு இணங்க நடவடிககை எடுக்க குறித்த பிரிவுவை அறிவூட்டியுள்ளதாக. | பெறுகைகள் வழகாட்டிக் கோவையின் பிரகாரம் பண்டங்களை கொள்வனவு செய்ய வேண்டும். போலியன ஆவணங்களை தயாரித்தல் தொடர்பாக தாபன விதிக் கோவையின் இரண்டாம் பிரிவு பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும. |

### 3.4 விளைவற்ற அல்லது குறைப்பயன்பாடுடைய ஆதனம், பொறி மற்றும் உபகரணம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் தங்குமிட தேவைப்பாட்டை உரியவாறு கவனத்திற் கொள்ளாது கொள்வனவு செய்த ரூபா 9,180,960 ஆன மூலதன உபகரங்களில் ரூபா 1,446,118 பெறுமதியான 3 சலவை இயந்திரங்கள் மற்றும் 3 | சலவை இயந்திரங்கள் மற்றும் குளிர்சாதன பெட்டிகள் வெளிநாட்டி மாணவ அலுவலர்கள் சமுகமளிக்க எதிர்பார்த்த எண்ணிக்கை பிரகாரம் கொள்வனவு செய்துள்ளதுடன் எதிர்பார்த்த எண்ணிக்கை இல்லாத காரணத்தால் களஞ்சிய இருப்புடன் வைக்கப்பட்டுள்ளது. 03 சலவை | தேவைப்பாட்டை உரியவாறு கவனத்திற் கொண்டு கொள்வனவு செய்ய வேண்டும். |

| | | |
|---|---|---|
| குளிர்சாதன பெட்டிகள் உள்ளடங்களாக மேலும் 9 வகை பண்டங்களிற்குரிய மின்சார உபகரணங்கள் பயன்படுத்தப்படாது விளைவற்று களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தது. | இயந்திரங்கள் மற்றும் 03 குளிர்சாதன பெட்டிகளை தேவையான போது திருத்த கனிஷமான காலமொன்று செல்வதால் வெளிநாட்டு மாணவ அலுவலர்களிற்கு விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்படும். | |

## 3.5 பெறுகைகள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | விடுதி தேவைப்பாட்டிற்காக வீட்டு பண்டங்களை கொள்வனவு செய்ய கல்லூரியினால் முன்வைத்த அளவுத் திட்டங்களிற்காக வழங்குனர்களினால் சமர்பித்த விலைகளில் உள்ளடங்கிய அளவுத் திட்டத்தை மதிப்பீடு செய்யாது வழங்குனர்களுக்கு தேவையான பண்டங்களை வழங்க சந்தர்ப்பம் வழங்கி ரூபா 1,822,006 பெறுமதியான கட்டளை சுவர்ன கெழும் நிறுவனத்திற்கு விழங்கப்பட்டிருந்தது. அங்கு கொள்வனவு செய்த ரூபா 350,250 பெறுமதியான 30 கருப்பு நிற சாப்பாட்டு மேசை கதிரைகளை விடுதிகளிற்கு அந்த நிறம் பொருத்தமற்றதால் பயன்படுத்தாது களஞ்சியத்தில் விளைவற்று காணப்பட்டன. அவ்வாறே இக் கட்டளையூடாக ரூபா 565,300 பெறுமதியான 5 கட்டில்கள் மற்றும் 5 மெட்டைகளை அளவுத்திட்டத்திற்கு இணங்காத காரணத்தால் திசெம்பர் 28 ஆம் திகதி அப் பண்டங்கள் மீண்டும் திருப்பி அனுப்பப்பட்டிருந்ததுடன் வழங்குனரால் முன்வைத்த ரூபா 158,440 பெறுமதியான செயலாற்றுகை பிணைமுறி திசெம்பர் 31 திகதி காலாவதியாகி இருந்தது. பெறுகைகள் வழிகாட்டிக் கோவைக்கு இணங்கும் வகையில் வேலை பூர்த்தி செய்த தினத்தை கடந்து 28 நாட்கள் வரை செல்லுபடியாகும் வகையில் செயலாற்றுகை பிணைமுறி | தொமகு பரிந்துரை மீது நிமித்த தேவைப்பாடுகளை கொள்வனவு செய்ய பெறுகைகள் விண்ணப்பத்தை தயாரித்து பெறுகைகள் குழுவிற்கு சமர்பிக்க முன்னர் பரிசோதிக்காது விடய பொறுப்பு எழுதுனரினால் ஏற்பட்ட தாமதத் தவறொன்றாக சுட்டிக் காட்டுவதுடன், இதன் பின்னர் அவ்வாறான தவறுகளை செய்ய வேண்டாம் என கடுமையான ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. 05 கட்டில்கள் மற்றும் 05 மெட்டைகளை வழங்கிய பின்னர் உரிய அளவுத் திட்டத்திற்கு அமையாதவாறு சமர்பித்துள்ளதால் தகைமை பரிசோதனை அலுவலரினால் நிராகரித்துள்ளதுடன், அப் பண்டங்களை உரிய அளவுத் திட்டத்திற்கு மற்றும் ஆக்கபூர்வமாக வழங்குமாறு பல சந்தர்ப்பங்களில உரிய வழங்குனர் நிறுவனத்திற்று அறிவூட்டிய போதும் இது வரை எவ்வித பதிலும் வழங்கப்படவில்லை. குறித்த செயலாற்றுகை காப்பு பிணைமுறி காலாவதியாகும் திகதி 2022.12.31 என குறிப்பிட்டு வழங்கியுள்ளதால் தற்போது குறித்த கால எல்லை காலாவதியாகியுள்ளது. இதன் பின்னரும் இவ்வாறான பிணைமுறி பெற்றுக் கொள்ளும் போது உரியவாறு பரிசோதித்து பெற்றுக் கொள்ளுமாறு பிரிவுப் பொறுப்பு அலுவலரிற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | இணங்கிய அளவுத் திட்டங்களின் பிரகாரம் பண்டங்களை பெற்றுக் கொள்ள வேண்டும். பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் செயலாற்றுகை பிணைமுறியை பெற்றுக் கொள்ள வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பெற்றுக் கொள்ளாததால் கல்லூரிக்கு அதனை பணமாக்கிக் கொள்ள முடியாதிருந்தது. | | |
| (ஆ) | பதவி நிலைக் கல்லூரியின் தேவைக்காக Heavy duty ஒளிப்பட பிரதி இயந்திரம் ஒன்றை கொள்வனவு செய்ய முதற்தடைவை 2022 சனவரி 26 திகதி விலைமனு கோரியிருந்த போதும் கல்லூரியின் தேவைப்பாட்டிற்கு இணங்காத வகையில் அளவுத் திட்டத்தை தயாரித்த காரணத்தால் மீளாய்வாண்டில் ஜுன் 28 ஆம் திகதி இரண்டாம் முறையும் விலைமனு கோரி குறித்த ஒளிப்பட பிரதி இயந்திரம் ரூபா 2,200,000 இற்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. சரியான அளவுத் திட்டததை தயாரிக்காததால் பெறுகைகள் நடவடிக்கைக்காக செலவிட்ட கால தாமதம் காரணமாக முதலாம் முறை விலைமனு கோரும் போத ரூபா 1,600,000 இற்கு நிலவிய ஒளிப்பட பிரதி இயந்திரத்தை இரண்டாம் முறை விலைமனு கோரிய போது ரூபா 2,200,000 இற்கு கொள்வனவு செய்ததால் பதவி நிலை கல்லூரிக்கு ரூபா 600,000 நட்டமொன்று ஏற்பட்டிருந்தது. | விடய எழுதுனரினால் ஏற்பட்ட தாமதத் தவறொன்றின் காரணமாக ஒரு நிமிடத்திற்கு 70 (cpm) என கோருமாறு பண்டக விண்ணப்பத்தின் போது வழங்கியுள்ள அளவுத் திட்டத்தில் குறிப்பிடப்பட்ட போது வழங்குனர்களினால் விலை பத்தரங்களை கோரும் போது ஒரு நிமிடத்திற்கு 45 (cpm) ஒளிப்படப் பிரதிகள் என அளவுத்திட்டம் தயாரிக்கப்பட்டு சமர்பிக்கப்பட்டுள்ளது. குறித்த ஒளிப்பட பிரதி இயந்திரத்தின் வினைத்திறன் ஒரு நிமிடத்திற்கு 60 தாழ்கள் ஆவதுடன் குறைந்த கால எலலையில் அதிகமான ஒளிப்பட பிரதிகளை பெற்றுக் கொள்ள இயலுமை காணப்படுவதாகவும், தற்போது பாசேகபக பயன்படுத்தும் Heavy Duty Digital Photocopy Machine Black & White இயந்திரம் 07 ஆண்டுகள் சேவை காலத்தை பூர்த்தி செய்துள்ளதாக தொமகு மூலம் சுட்டிக்காட்டியுள்ளதுடன், தரத்தில் மற்றும் செயலாற்றுகையில் உயர்ந்த, பயன்பாட்டில் விளைவுமிக்கதன் மீது அனுபவமுள்ள Konica Minolta இயற்திரத்தை கொள்வனவு செய்ய பெறுகைகள் குழுவினால் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் கொள்வனவு செய்ய வேண்டும். |

## 3.6 ஒப்பந்த நிர்வாகத்தின் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ரூபா 133 மில்லியன் செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்ட நான்கு மாடி நூலகம் மற்றும் பரீட்சை சாலை கட்டிடத்தின் நீர் ஒழுகுதன் பிரச்சினையினால் மேல் மாடி மின்சார தொகுதிற்கு மற்றும் சிவர்களுக்கு பாரிய சேதம ஏற்பட்டுள்ளதுடன் மீள்திருத்த நடவடிக்கை மேற்கொள்ள 2019 ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரையும் முடியாமலிருந்தது. | கட்டிடத்தில் நீர் நிவாரண நடவடிக்கை மேற்கொள்வதை பரிசோதிப்பதற்காக தரைப்படை பொறியியல் சேவைகள் பணிப்பாளர் சபை பிரதிநிதி ஒருவரை வரவழைத்து அதற்கு தேவையான மதிப்பீட்டுப் புத்தகமொன்றை தயாரித்து பொறியியல் சேவைகள் பணிப்பாளர் சபைக்கு சமர்பிக்க தற்போது நடவடிக்கை | நிர்மாணத்தை சரியாக செய்து கொள்ள வெண்டும். கட்டிடத்திற்கு சேதமாகாதவாறு குறைபாடுகளை செய்து கொள்ள வேண்டும். |

| | | |
|---|---|---|
| | எடுக்கப்பட்டுள்ளது. குறித்த மதிப்பீட்டுப் பத்திரத்திற்காக பொறியியல் சேவைகள் பணிப்பாளர் சபையிலிருந்து அங்கிகாரம் வழங்கப்பட்ட பின்னர் நீர் நிவாரண தேவையான பொருட்கைள கொள்வனவு செய்ய மற்றும் சேவையை மேற்கொள்வதற்கு இக் கட்டிடத்தை நிர்மாணித்த நிறுவனத்திற்கு செலுத்த வேண்டியுள்ள நிறுத்தட் பணத்தை (Retantion Money) பயன்படுத்தி பொறியில் சேவைகள் படையணியின் மூலம் மேற்கொள்ளவதற்காக முன்நடவடிக்கை எடுக்கப்படும். | |

**3.7 மனிதவள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியன்று 32 ஆரம்ப வெற்றிடங்களும் 9 இரண்டாம் வெற்றிடங்களும் மற்றும் 2 மூன்றாம் நிலை வெற்றிடங்களும் காணப்பட்டன. | வெற்றிடம் காணப்படும் பதவிற்காக ஆளணி அட்சேர்ப்பது இடைநிறுத்த நடவடிக்கை எடுக்குமாறு அமைச்சரவை முடிவு/ சுற்றறிக்கை/ கடிதங்கள் மூலம் அறிவிக்கப்பட்டள்ளது. | வெற்றிடங்கள் நிரப்ப அல்லது உள்ளவாறான ஆளணிக்கு பொருத்தமானவாறு அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை மீளாய்வு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |